**முக்கிய வார்த்தைகள்:**
நினைவூட்டு
நீதி, நேர்மை
மேன்மை
மறுமை

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**08 மே 2026 / 20 துல்கஃதா ஹிஜிரி 1447**

# <u>இஸ்லாமியக் குடும்பங்களும் தற்காலச் சவால்களும்</u>

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவதன் மூலமாகவும், அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களை விட்டும் விலகி இருப்பதன் மூலமாகவும் அல்லாஹ்வை நினைவில் கொள்வோமாக! மற்றவர்களை நன்மையின் பால் அழைப்பீர்களாக! தவறு செய்பவர்களைத் தடுப்பீர்களாக! நமது வாழ்க்கை முழுவதும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவினால் அருள் புரியப்படட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**
கடந்த வாரம், இளைஞர்களால் எதிர்கொள்ளப்படும் சவால்களைப் பற்றி நாம் விவாதித்தோம். இந்த வாரம், முஸ்லிம் குடும்ப அமைப்பினால் எதிர்கொள்ளப்படும் சவால்களைப் பற்றியும், அச்சவால்களை அறிவு

ஞானத்தாலும் நேர்மையாலும் எதிர்கொள்வதற்கான சன்மார்க்க வழிகாட்டுதல் யாவை என்பதைப் பற்றியும் விவாதிக்க இருக்கின்றோம்.

**அன்பிற்குரிய சகோதரர்களே**!
தற்காலத்தில், முஸ்லிம் குடும்பத்தார்கள் மூன்று பெரிய சவால்களை எதிர்கொண்டு வருகிறார்கள்.

**முதலாவதாக: அல்லாஹ்வுக்காக ஒருவர் மற்றவருக்கு நினைவூட்டிக் கொள்வதில் ஏற்படும் சவால்**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "அத்தாரியாத்" எனும் அத்தியாயத்தின் 55-வது வசனத்தில் கூறுகிறான்:

وَذَكِّرْ فَإِنَّ ٱلذِّكْرَىٰ تَنفَعُ ٱلْمُؤْمِنِينَ ﴿٥٥﴾

பொருள்: "மேலும், [நபியே! **நினைவூட்டி**] நல்லுபதேசம் செய்வீராக! ஏனெனில், நிச்சயமாக [**நினைவூட்டுவதும்**] நல்லுபதேசம் செய்வதும் [ஓரிறை நம்பிக்கையாளர்களான] முஃமின்களுக்கு நற்பயனளிக்கும்"

தற்போது ஓதப்பட்ட வசனத்தில், நம்மில் ஒவ்வொருவரும் மற்றவருக்கு நன்மையை ஏவி, தீமையைத் தடுப்பதில் அடிக்கடி **நினைவூட்டிக்** கொள்ள வேண்டுமென அல்லாஹ் நமக்குக் கட்டளையிடுகிறான். எனது சகோதரர்களே! அல்லாஹ் இவ்வாறு ஏன் கட்டளையிடுகிறான்? எனச் சிந்திக்க வேண்டும். **நினைவூட்டுதல்** என்பதன் பொருள், ஒரு காலத்தில் ஏற்கனவே அறியப்பட்ட விஷயத்தை, நாம் மறந்து விட்டதன் காரணமாக, மீண்டும் நினைவூட்டப்படுவதாகும். காலங்கள் கடந்து விட்டதன் காரணமாகவோ அல்லது நாம் அறியாத வகையில் ஏற்பட்டு விட்ட மாற்றங்களின் காரணமாகவோ நாம் அவ்விஷயத்தை மறந்திருக்கலாம்.

உதாரணமாக, முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாக, சூதாட்டம் என்பது, சீட்டு சூதாட்டம் அல்லது குதிரைப் பந்தயம் ஆகியவற்றுடன் மட்டும் வரையறுக்கப்பட்டதாக இருந்தது. மேலும், அவை நேரடியாக நடைபெற்றன. இன்றைய முஸ்லிம் குடும்பத்தார்களும் அவ்வாறே, இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்ட சூதாட்டத்தை எதிர்கொள்கி றார்கள்; ஆனால், இவ்வகையான சூதாட்டங்கள் வித்தியாசமான வடிவங்களில் உள்ளன. உதாரணமாக, இணையவழி சூதாட்டத்தை எடுத்துக் கொள்ளலாம்; அவை சமூகத்தால் இயல்பானவையாகக் கருதப்படலாம். எனினும், இவ்வகையான செயல்பாடுகள் இஸ்லாத்தில் தடைசெய்யப்பட்டதாகவும், பாவமாகவும் ஏன் கருதப்படுகிறது? ஏனெனில், வெற்றியாளர் நியாமற்ற இலாபத்தைப் பெறுகிறார்; தோற்றவரோ மனத் தளர்வை உணர்கிறார். ஆரம்ப மூலதனம் முதற்கொண்டு, செலவழிக்கப்பட்ட பணம் அனைத்தும் நஷ்டமாகி விட்டதே என நினைத்து வருந்துகிறார்.

சிலவேளைகளில், மற்றவர்களுக்கு உபதேசம் செய்யவும் **நினைவூட்டவும்** நாம் தயங்குகிறோம்; காரணம், ஏற்கனவே இவ்விசயம் அவர்களுக்குத் தெரியுமே, நாம் எப்படி உபதேசம் செய்வது என நினைக்கின்றோம். உண்மையில், **நினைவூட்டுதல்** என்பது வெறும் கண்டித்தல் என்பது மட்டுமல்ல, அதில் சிந்திப்பதற்கான செய்தி காணப்படுவதுடன், தேவையான முன்னேற்றங்களையும் அது ஏற்படுத்துகிறது.

உண்மையில், நமது குடும்பத்தார்களுக்கு உபதேசம் செய்வதென்பது சவால்மிக்க விஷயம் தான்; காரணம், அதன் காரணமாக நமது உறவுமுறை பாதிக்கப்படுமே அல்லது நமது உபதேசம் தவறாகப் புரிந்து கொள்ளப்படுமே என நாம் பயப்படுகிறோம். எனினும், அல்லாஹ்வுக்காக ஒருவர் மற்றவருக்கு **நினைவூட்டிக்** கொள்வது, ஆழமான அன்பின் அடையாளமாகும். நேர்மையான உபதேசமானது, தவறு செய்பவர் விஷயத்தில் தீர்ப்பளிப்பதல்ல, மாறாக, அல்லாஹ்வுடனான அவரது உறவின் விஷயத்தில் கவலை கொள்வதற்கான அடையாளமாகும்.

நினைவில் கொள்ளுங்கள்! ஒரு உறுதியான முஸ்லிம் குடும்பம் என்பது தவறுகளை விட்டும் பரிசுத்தமானது என்பதல்ல, மாறாக, எந்தக் குடும்பம் ஆழமான அறிவு ஞானம் மற்றும் பணிவுடன், உண்மையின் பால் மற்ற குடும்பங்களுக்கு வழிகாட்டுகின்றதோ அதுதான், உறுதியான முஸ்லிம் குடும்பமாகும்.

**இரண்டாவதாக: நீதியையும் மேன்மையையும் பற்றிப் பிடிப்பதில் ஏற்படும் சவால்**

சாதனைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும் ஒரு சமுதாயத்தில், சிலவேளைகளில், ஒருவரை மதிப்பீடு செய்வதற்கு அதாவது,, அவரது அந்தஸ்த்தை அளப்பதற்கு, ”இவர் தனது குடும்பத்துக்கு என்ன நன்மைகளைச் செய்துள்ளார்?” எனக் கேட்கப்படுகிறது. ”இவர் அல்லாஹ்வின் பார்வையில், தனது குடும்பத்தாருக்கு எந்தளவு உண்மையான பொறுப்புணர்வுடன் நடந்துள்ளார்?” எனக் கேட்கப்படுவதற்குப் பதிலாக இவ்வாறு கேட்கப்படுகிறது.

இப்படிப்பட்ட சிந்தனை, கட்டுப்படுத்தப்படாமல் விடப்பட்டால் குடும்பத்தாருக்கிடையே ஆரோக்கியமற்ற போட்டிகள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. கல்விச் சாதனைகள், தொழில் அல்லது சில ஆற்றல்களை அடிப்படையாகக் கொண்டு, பிள்ளைகளில் ஒருவர் மற்றவரை ஒப்பிட்டுப் பார்க்க முயல்வார்கள். பக்கச் சார்பு, சமமற்ற நடத்தைகள் ஆகியவை நம்மை அறியாமலேயே ஏற்பட்டு விடும். சிலர், அதிக அக்கறை, புகழ் மற்றும் முன்னுரிமையைப் பெறுவார்கள்; சிலர், ஓரம் கட்டப்பட்டு, ஒதுக்கப்பட்ட உணர்வுடன் விடப்படுவார்கள்.

இவ்விதமான எதிர்மறை விளைவுகள், பெற்றோர், பிள்ளைகள், சகோதர, சகோதரிகள், உறவினர்கள் போன்றவர்களின் உறவுமுறைகளில் ஏற்படும். இது, இஸ்லாமிய மதிப்பீடுகளுக்கு முற்றிலும் முரண்பட்டதாகும். இஸ்லாம், குடும்ப விவகாரங்கள் முதற்கொண்டு, அனைத்து அம்சங்களிலும் **நீதி, நேர்மை,, உயர்வான சிந்தனை** ஏற்பட வேண்டுமென அழைப்பு விடுக்கின்றது.

இவ்விஷயத்தை, இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நமக்கு **நினைவூட்டி** யுள்ளார்கள். ஒரு ஹதீதில் அறிவிக்கப்படுகிறது: ஒருமுறை, ஒரு நபித்தோழர் தனது பிள்ளைகளில் ஒருவருக்கு ஒரு பரிசைக் கொடுத்தார்; அதற்கு இறைத்தூதர்[ஸல்] அவர்கள் சாட்சியாக இருக்க வேண்டுமென விரும்பினார். அப்போது இறைத்தூதர்[ஸல்] அவர்கள் உங்களின் எல்லா பிள்ளைகளுக்கும் இவ்வாறு பரிசு கொடுத்துள்ளீரா? என அவரிடம் கேட்க, "இல்லை" என அவர் கூறினார். அதைக் கேட்ட இறைத்தூதர்[ஸல்] அவர்கள்: "அல்லாஹ்வை நினைவில் கொள்வீராக! பிள்ளைகளுக்கு மத்தியில் **நியாயமாக** நடந்து கொள்வீராக!" என அவரிடம் கூறினார்கள். உடனே அந்த தோழர் வீட்டிற்குச் சென்று, அந்த ஒரு பிள்ளையிடம் கொடுத்த பரிசைத் திரும்பப் பெற்றுக் கொண்டார். [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்கள்: இமாம் புகாரி [ரஹ்], இமாம் முஸ்லிம் [ரஹ்]

தற்போது கூறப்பட்ட ஹதீதானது, குடும்பத்தாருக்கிடையே **நீதி, நேர்மையை, மேன்மையை** நிலைநாட்ட வேண்டுமென்ற விஷயம் நமது விருப்பத்திற்குரிய விஷயமல்ல, மாறாக, கட்டாயம் நிறைவேற்றப்பட வேண்டிய மார்க்கக் கடமையாகும் எனத் தெரிவிக்கின்றது. எனவே, "நாம் நமது குடும்ப உறுப்பினர்களை, அவர்கள் நமக்கு வழங்கும் உலகப் பயன்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்கின்றோமா? அல்லது அவர்கள் விஷயத்தில் நாம் **நீதி, நேர்மையாக** நடந்து கொள்ள வேண்டுமென்ற அமானிதத்தை நிறைவேற்றுகின்றோமா?" என அடிக்கடி நம்மை நாம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

## மூன்றாவதாக: இவ்வுலகிலும் மறுமையிலும் நன்மையை நாடுவதில் உள்ள சவால்

**எனது சகோதரர்களே!**

தற்காலத்தில், இஸ்லாமியக் குடும்பங்களால் எதிர்கொள்ளப்படும் சவால்களில் மற்றொன்று, உலக வாழ்க்கையின் நன்மைகளைத் தேடுவதையும் **மறுமை** வாழ்க்கைக்கான நன்மைகளைத் தேடுவதையும்

சமநிலையாக அமைத்துக் கொள்வதில் ஏற்படும் சவாலாகும். இவ்வாறு அமைத்துக் கொள்வது அவசியமாகும். நமது உலகியல் வாழ்வின் ஏற்ற, இறக்கங்கள் அல்லாஹ்வின் திருப்தியுடன் நம்மை இணைக்கும் பாலமாக அமைய வேண்டும். அதன் காரணமாக, மறுமைத் தீர்ப்பு நாளில் நமக்கு நலமான வாழ்க்கை கிடைக்க வேண்டும்.

நம்மனைவருக்கும் ஒரு **நினைவூட்டுதலாக**, திருக்குர்ஆனின் "அல்-பகரா" எனும் அத்தியாயத்தின் 201-வது வசனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் பிரார்த்தனையை ஓதுவது பொருத்தமாக இருக்கும்:

رَبَّنَآ ءَاتِنَا فِى ٱلدُّنْيَا حَسَنَةً وَفِى ٱلْءَاخِرَةِ حَسَنَةً وَقِنَا عَذَابَ ٱلنَّارِ

பொருள்: "எங்கள் இறைவனே! எங்களுக்கு இவ்வுலகில் நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக; **மறுமையிலும்** நற்பாக்கியங்களைத் தந்தருள்வாயாக; இன்னும், எங்களை [நரக] நெருப்பின் வேதனையிலிருந்தும் காத்தருள்வாயாக!"

எனது சகோதரர்களே! நமது வாழ்க்கைமுறை, நாம் சிந்திக்கும் விதம் ஆகியவை - நாம் அறியாமலேயே- தற்காலத்தின் விதிமுறைகள் மற்றும் பழக்க வழக்கங்களால் வழிநடத்தப்பட்டதாக இருக்கலாம்; கடந்த "குத்பா" பிரசங்கத்தில் **நினைவூட்டப்பட்டதைப்** போன்று, அவை இஸ்லாமியப் போதனைகளுக்கு இணக்கமாக இருக்கும் எனக் கூற இயலாது. எனவே, உலக **மேன்மைக்காக** நாம் முயற்சி செய்வதைப் போன்று, மார்க்கக் கல்வி மற்றும் ஆன்மீக முன்னேற்றங்களின் மூலம் **மறுமையின்** வெற்றிக்காகவும் நாம் முயற்சி செய்வது அவசியமாகும். இரு முயற்சிகளும் ஒன்றோடொன்று இணைந்து செல்ல வேண்டும்.

நினைவில் கொள்ளுங்கள்! இவ்வுலகம் தற்காலிகமானதாகும்; தொழில்கள் முடிந்து விடும், செல்வம் பின்னால் விட்டுச் செல்லப்படும், அந்தஸ்துகள், பெயர்கள், புகழ்கள் எல்லாம் மறக்கப்பட்டு விடும். நமது இறைவனைச்

சந்திக்கும் போது, நமக்குப் பயன் தரும் நற்காரியங்கள் மட்டுமே தொடர்ந்து இருக்கும் இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நவின்றுள்ளார்கள்:

*"அறிவுள்ள நபர் தன்னை ஒரு பொறுப்பாளியாகக் கருதுவார்; மரணத்துக்குப் பின்பு நிகழும் நிகழ்ச்சிக்காக அவர் உழைப்பார்; திறமையற்ற மனிதனோ தனது மனோ இச்சைகளைப் பின்பற்றுவார்; அல்லாஹ்வின் மன்னிப்பை மட்டும் எதிர்பார்ப்பார்"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் திர்மிதி ரஹ்]

யா அல்லாஹ்! எங்களையும் எங்கள் குடும்பத்தாரையும் மன்னிப்பாயாக; உனது திருப்தியைத் தரும் பாதையின் பால் எங்களுக்கு வழிகாட்டுவாயாக; எங்களின் குடும்பத்தார்களை, சுய பரிசோதனை செய்து கொள்கின்ற, மற்றவர்களுக்குச் சிறந்த முன்மாதிரியாக அமைகின்ற முஸ்லிம் குடும்பங்களில் ஒன்றாக ஆக்குவாயாக; இவ்வுலகத்தின் சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான அறிவு ஞானத்தை எங்களுக்கு வழங்குவாயாக; உனக்காக ஒருவர் மற்றவருக்கு **நினைவூட்டிக்** கொள்கின்ற, கஷ்டமான காலங்களிலும் **நீதி**, **நேர்மையுடன்** நடந்து கொள்கின்ற, ஒவ்வொரு விஷயத்திலும் **மறுமை** வாழ்க்கைக்கு முன்னுரிமை அளிக்கின்ற அடியார்களில் ஒருவராக எங்களை ஆக்குவாயாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَموَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالحَرْبَ وَالاِعْتِدَاءَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلَسْطِينَ، وَفِيْ كُلِّ مَكَانٍ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ.

اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمانَ لِلْعالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذابَ النَّارِ.

عِبادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسانِ وَإِيتاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ. فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِنْ فَضْلِهِ يُعْطِكُمْ، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ ما تَصْنَعُونَ.